# *புனித ஜோசப் குப்பெர்த்தீனோ (1603 – 1663)*

இவர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிக் கூடத்தில் சேர்ந்து கல்வி கற்க இவரால் முடியவில்லை. செருப்பு செய்கிற ஒருவனிடம் வேலை பார்த்தார். பிரான்சிஸ்கன் சபையில் துணைச் சகோதாராகச் சேர்ந்து குருப்பட்டம் பெற்றார். இவர் தவ முயற்சிகள் செய்வார். சம்மனசு போல் தூய்மை உள்ளவர். மாதா மீது அதிக பக்தி கொண்டிருந்தார். கடவுளை உருக்கமாக நேசித்தார். உத்தம கீழ்ப்படிதல் எல்லாத்தரப்பட்ட மக்களிடமும் பரப்புவார்.

கடவுள் இவருக்கு பல அரிய வரங்களைக் கொடுத்தார். வரும் காரியங்களை முன்னறிவிப்பார். நோய்களை குணப்படுத்துவார். அநேக மக்கள் அவரது புதுமைகளைக் கண்டார்கள். திடீரென கோவில் வாசலிருந்து பீடத்துக்கு பறந்து செல்வார். ஒருமுறை இவர் ஓர் ஒலிவ மரத்தின் கிளைக்குப் பறந்து சென்று அங்கு அரைமணி நேரம் செபத் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். மரத்தின் கிளை வளையவே இல்லை. இவர் செய்த புதுமையை முன்னிட்டு இவர் இருந்த மடத்திற்கு மக்கள் திரள் திரளாக வரத் தொடங்கினார்கள். எனவே இவரை பல்வேறு இடங்களுக்கு அனுப்பினார்கள். 35 ஆண்டுகளாக இவர் ஏனைய சன்னியாசிகளோடு தேவ ஸ்துதி பாட அனுமதிக்கப்படவில்லை. அவர்களோடு சேர்ந்து உணவருந்த இவருக்கு அனுமதி கிடையாது. கோவிலுக்கு சுற்று பிரகாரமாக இவர் ஏனையோருடன் போகக்கூடாது. இவர் ஓர் சிற்றாலயத்தில் தனியே திருப்பலி நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் கடவுளது பெயரையோ ஒரு புனிதரது பெயரையோ அல்லது கோவில் மணிச் சத்தத்தையோ கேட்டால் இவர் பரவசமாகி விடுவார். 40 ஆண்டுகளாக இவர் தவம் செய்தார். என்றாலும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருப்பார். இவருக்கு துன்பங்கள் ஏராளமாக வந்தது. இவரது பெயரைக் கெடுத்தார்கள். பழிகளைச் சுமத்தினார்கள். இவரை தப்பர்த்தகம் பண்ணிணார்கள்.

**சிந்தனை:**

“கடவுளை நேசி; கடவுள் மீது அன்பு ஒருவனிடம் ஆட்சி செய்யுமானால் அவன் உண்மையாகவே செல்வந்தன்”.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் உம்மை அனைத்திற்கும் மேலாக அன்பு செய்யும் வரத்தைத் தாரும்.